அடையாள இலக்கம்:

C

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2022

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.** (புள்ளிகள்: 5)

1. வாழைமரம் ____________ + ____________
2. வருமானவரி ____________ + ____________
3. போர்க்காலம் ____________ + ____________
4. கண்ணிமை ____________ + ____________
5. நாட்காட்டி ____________ + ____________

**(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** (புள்ளிகள்: 5)

1. ஆறு + மணல் = ____________
2. தமிழ் + இசை = ____________
3. அன்பு + இல்லை = ____________
4. முன் + பகல் = ____________
5. சொல் + போர் = ____________

**(இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருள் கொண்ட சொற்களை எழுதுக.** (புள்ளிகள்: 5)

1) இளமை ____________
2) குழப்பம் ____________
3) சுறுசுறுப்பு ____________
4) பகல் ____________
5) வளர்பிறை ____________

**(ஈ) பின்வரும் சொற்களின் உயர்திணைப் பெண்பாற் சொற்களை எழுதுக.** (புள்ளிகள்: 5)

1) தோழன் ____________
2) நல்லவன் ____________
3) தம்பி ____________
4) நடிகன் ____________
5) மாணவன் ____________

**(உ) அடைப்புக் குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கீழே தரப்பட்ட வசனங்களிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது.**

(புள்ளிகள்: 10)

1. நாட்டின் பிரதமர் இன்று தொலைக்காட்சியில் மக்களுக்கு ________________________ . (உறையாற்றினார், உரையாற்றினார்)
2. எமது தமிழ் ஆசிரியர் _______________ அறிவுள்ளவர். (பரந்த, பறந்த)
3. தாய் ஓடி வந்த தன் மகளை மார்புடன் ____________________ கொண்டாள். (அனைத்துக், அணைத்துக்)
4. தென்னை மரத்திலே தேங்காய்கள் ____________________ தொங்குகின்றன. (குழை குழையாகத், குலை குலையாகத்)
5. காவலர்கள் சந்தேகத்திற்கு இடமான _______________ கைது செய்து கூட்டிச்சென்றனர் (மூவரை, மூவறை)
6. இரை தேடிக் காலையிற் பறந்து சென்ற ____________________ மாலையில் கூடு வந்து சேர்ந்தன. (பறவைகள் , பரவைகள்)
7. சூரிய _____________________ உயிர்களுக்குத் தேவை. (ஒலி, ஒளி)
8. மாடிப்படியிலிருந்து __________________ பொழுது மாலா கால் தவறிக் கீழே விழுந்தாள். (இறங்கிய, இரங்கிய)
9. மழை __________________ வீடுகளுக்குள் புகுந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. (வெள்ளம், வெல்லம்)
10. இருளில் ____________________ நடந்து செல்வதைத் தவிர்க்க வேண்டும். (தணியாக, தனியாக)

**(ஊ) கோடிட்ட இடங்களிலே பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:** (புள்ளிகள்: 10)

1. இரவில் ____________________ ஔிர்விடும் நட்சத்திரங்கள் பலவற்றைப் பார்த்து மகிழலாம்.
2. மழையின்மையால் ____________________ எல்லாம் வாடி வதங்கிக் காணப்பட்டன.
3. பூந்தோட்டத்தில் இருந்த பூக்களின் அழகு பலரது கவனத்தையும் ____________________ .
4. கோமாளியின் வேடிக்கை அனைவரையும் வயிறு ____________________ சிரிக்க வைத்தது.
5. வெள்ளத்தில் சிக்கியவர்களை ____________________ இராணுவத்தினர் அழைக்கப்பட்டனர்.
6. பாகற்காய் ____________________ இருந்தாலும் உணவில் சேர்த்துக் கொள்வது உடலுக்கு நல்லது.
7. இயந்திரக் கோளாறு ஏற்பட்டதால் கப்பல் ஒன்று கடலில் ____________________ .
8. தமிழர்கள் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் ஆகிய பழங்களை ____________________ என்பர்.
9. பிள்ளைகள் ____________________ மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டும்.
10. எமது ____________________ சிறப்புகளை அறியவிரும்புபவர்கள் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வேண்டும்.

**(எ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்கள் எழுதுக.** (புள்ளிகள்: 20)

**குறிப்பு : ஐந்து (5) சொற்களுக்குக் குறையாமல் வசனம் அமைய வேண்டும்**

1. பாரதியார்:________________________________________

2. பல்லினக்கலாச்சாரம்:________________________________________

3. மழை:________________________________________

4. புதுவருடம்:________________________________________

5. சிறுகதை:________________________________________

6. உடற்பயிற்சி:________________________________________

7. சமூகசேவை:________________________________________

8. சகோதரர்கள்:________________________________________

9. காட்டுத்தீ:________________________________________

10. நிலா:________________________________________

**(ஏ) கீழே தரப்பட்ட கவிதையைப் கருத்தூன்றிப் படித்த பின்னர் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.** (புள்ளிகள்: 10)

கூடு காற்றில் ஆடி இந்தக்
குஞ்சு விழுந்து விட்டதே
தேடித் தாயும் தூக்க முன்னர்
செத்துப் போகத் துடிக்குதே!

கட்டெறும்பும் ஊருதே
காகம் கொத்தப் பார்க்குதே
வட்டம் போட்டுப் பருந்து இந்த
மரத்தை நோக்கி வருகுதே

மரத்தில் ஏறிக் கூட்டிலே
வைத்து விடுங்கள் குஞ்சையும்
இரக்கம் ஆக இருக்குதையோ
இளைத்துக் கிடந்து துடிக்குதே.

**<u>கேள்விகள்:</u>**

மேலே குறிப்பிட்ட கவிதையில் இருந்து பொருத்தமான விடைகளை எழுதுக.

1) பின்வரும் சொற்களின் கருத்தைத் தரும் ஒத்தசொல் தருக. (2 புள்ளிகள்)

| கவிதைச் சொல் | ஓத்த பொருட்சொல் |
|---|---|
| செத்துப்போக | |
| இரக்கம் | |

2) பறவைகள் எங்கே வாழ்கின்றன? (2 புள்ளிகள்)

________________________________________

________________________________________

3) குஞ்சு ஒன்று காயம் பட்டால் முதலில் இரக்கம் காட்டக்கூடியவர் யார்? (1 புள்ளி)

________________________________________

4) காயமுற்ற பறவைக்குஞ்சைச் சுற்றி நடக்கின்ற நிகழ்வுகள் எவை விபரிக்க? (4 புள்ளிகள்)

- ________________________________________
- ________________________________________
- ________________________________________
- ________________________________________

5) பரிவைக் காட்டும் வரிகள் எவை? (2 புள்ளிகள்)

- ________________________________________
- ________________________________________

**(ஐ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.** (புள்ளிகள்: 15)

# பேராசை

ஒரு வேடன் காட்டுக்கு வேட்டைக்கு போய், ஒன்றும் கிடைக்காமல் பல நாட்கள் அலைந்து கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் ஒரு மானைக் கண்டு (1) ________________. அதன் பின்னே விரட்டிக் கொண்டு ஓடிச்சென்று அம்பெய்து கொன்றான், அதைத் தோளில் (2) ________________ தன் குடிசையை நோக்கி செல்லும் வழியில் ஒரு பெரிய பன்றியை கண்டான். தோளில் தொங்கும் மான் போதாதென்று, இந்தப் பன்றியையும் (3) ________________ எடுத்துச் சென்றால் இரண்டுநாள் சாப்பாட்டுக்கு போதும் என்று எண்ணி அதன் மேல் (4) ________________ வேடன். அந்தப் பன்றி (5) ________________ கொண்டு அவன் மேல் பாய்ந்து வேடனைத் (6) ________________ அவனைக் கொன்றுவிட்டு தானும் (7) ________________ விழுந்து இறந்தது.

அப்பொழுது அந்த வழியாக ஒரு நரி வந்தது. (8) ________________ வேடனையும், மானையும், பன்றியையும் கண்டு 'ஆகா! மூன்று நாள்களுக்குச் சாப்பாட்டுக்கு (9) ________________ , என்று சொல்லிக்கொண்டே, வேடன் வைத்திருந்த வில்லின் நாணைப் போய் முதலில் கடித்தது. நாணறுந்தவுடன், விற்கம்பு சடக்கென்று விரிந்து நரியின் வயிற்றில் (10) ________________ உடனே அந்த நரியும் செத்து விழுந்தது.

| | | | |
|---|---|---|---|
| சினம் | துரத்தினான் | தைத்தது | செத்துக்கிடக்கும் |
| தாக்கியது | கொன்று | மயங்கி | சுமந்துகொண்டு |
| அம்பெய்தான் | போதவில்லை | சுட்டான் | பஞ்சமில்லை |

(ஒ) **குறைந்தது 60 சொற்களில் கீழே தரப்பட்ட தலைப்பைப் பற்றி எழுதுக.** (புள்ளிகள்: 15)

தமிழ் மொழியின் பெருமை